**CC. No. 2/2025 PW 2 07.11.2025**

சாட்சியின் பெயர் –சேகர், த/பெ. வெங்கடாச்சாரி

குற்றப்பல்வகை மனு எண். 241/2025 ல் 19.09.2025 அன்று ஏற்பட்ட உத்தரவின் படி சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு ஆஜரானார். சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**<u>1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எனது பெயர் என்னவென்றால் சேகர். நான் என்ன படித்துள்ளேன் என்றால் பழைய SSLC படித்துள்ளேன். என்னை பட்டாச்சாரி பட்டாச்சாரி என்று அழைப்பதன் காரணம் என்னவென்றால் வைணவத்தில் கோவிலில் பூஜை செய்யும் குருக்களை பட்டாச்சாரி என்று அழைப்பார்கள். நான் கோவிலில் என்ன வேலை செய்தேன் என்றால் பட்டாச்சாரியராக வேலை செய்தேன். சம்பவம் நடந்த கோவிலில் எத்தனை வருடங்கள் நான் பட்டாச்சாரியராக பணிபுரிந்தேன் என்றால் 7 – 8 வருடங்கள் பணிபுரிந்தேன். மேற்கண்ட பணி காலத்தில் குறிச்சியில் உள்ள கோதண்டராமர் கோவிலில் மட்டும் பட்டாச்சாரியராக இருந்தேனா அல்லது வேறு கோவில்களில் பணி செய்தேனா என்றால் கோதண்டராமர் கோவிலில் மட்டுமே பணிபுரிந்தேன். கோவிலில் பட்டாச்சாரியார் என்பதால் கோவிலின் சாவியை எப்போதும் நான் வைத்திருப்பேன் என்றால் சரிதான். கோவில் கதவுகளை பூட்டியிருந்த பூட்டுக்கள் அனைத்தும் பெரிய பூட்டுக்கள் என்றால் சரிதான். கோவில் பூட்டுக்களை அவ்வளவு எளிதாக உடைக்க முடியாது என்றால் சரிதான். கோவிலுக்கு அருகில் முதல் வீடாக என் வீடு இருந்தது என்றால் சரிதான. கோவிலில் இருந்து வரும் சத்தம் வீட்டில் இருக்கும் போது நன்கு கேட்கும் என்றால் அவ்வளவு துாரத்தில் என் வீட்டிற்கு கேட்காது. என் வீட்டில் இருந்து கோவிலை பார்த்தால் கோவிலின் பிரதான வாயில் மற்றும் கதவு நன்றாக தெரியும் என்றால்

வீட்டில் இருந்து வெளியில் வந்து பார்த்தால் நன்றாக தெரியும். கோவிலின் பிரதான வாயிலில் மின் கம்பம் உள்ளது என்றால் சரிதான். சம்பவத்தின் போது மின் கம்பத்தின் விளக்கு ஒளிர்விட்டுக்கொண்டிருந்தது என்றால் மழையின் காரணமாக அவ்வப்போது மின் தடை ஏற்பட்டதால் விளக்கு விட்டுவிட்டு ஒளிர்விட்டுக்கொண்டிருந்தது. சம்பவத்திற்கு முன்பு என்றைக்கு, எத்தனை மணிக்கு பூஜையை முடித்துவிட்டு வீட்டிற்கு சென்றேன் என்றால் 30.10.2012ல் காலையில் 10.00 மணிக்கு பூஜையை முடித்துவிட்டு வீட்டிற்கு சென்றுவிட்டேன். அன்று மாலையில் ஒருவர் இறந்துவிட்டதால் மாலை வேலையில் கோவிலில் பூஜை செய்யவில்லை. எப்போது நான் பார்த்த போது பெரிய கதவு திறந்திருந்தது என்றால் 31.10.2012ம் அன்று காலை 11.00 மணிக்கு பூஜை செய்ய கோவிலுக்கு சென்று கதவுக்கு அருகில் சென்றபோது தான் பெரிய கதவு திறந்திருந்தது தெரியவந்தது. கோவிலின் பிரதான வாயிலின் கதவின் பூட்டு பெரியது என்றால் சரிதான். அதேபோல் கிரில் கேட் மற்றும் மரக்கதவின் பூட்டானது பெரியது என்றால் சரிதான். பூட்டு உடைக்கப்பட்டிருந்ததை போய் பார்த்தேனா என்றால் நான் பார்த்தபோது கதவில் இருந்த பூட்டுக்கள் காணவில்லை. சம்பவ இடத்திலும் பூட்டுக்கள் காணப்படவில்லை. காவல்துறையினர் விசாரணையில் நான் கொடுத்த வாக்குமூலத்தில் கோவில் கதவில் இருந்த பூட்டுக்கள் உடைக்கப்பட்டிருந்தது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். தற்போது முதல் விசாரணையிலும், கோவில் கதவின் பூட்டுக்கள் உடைக்கப்பட்டிருந்தது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் கதவில் பூட்டுக்களை பார்க்காமலேயே உடைக்கப்பட்டிருந்ததாக சொல்கிறேன் என்றால் நான் பார்த்தபோது கதவு திறந்திருந்தது, ஆனால் கதவில் பூட்டுக்கள் இல்லை. எனவே, கோவில் கதவில் பூட்டுக்கள் உடைந்தது குறித்து காவல்

துறையினரிடம் கொடுத்த வாக்குமூலத்திலும், முதல் விசாரணையிலும் நான் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் பொய்யானவை என்றால் சரியல்ல. நான் பார்க்கும் போது தாழ்பாள் உடைந்திருந்ததா அல்லது எவ்வாறு இருந்தது என்றால் நன்றாக கதவில் இருந்தது. அதேபோல் கிரில் கேட் மற்றும் மரக்கதவின் தாழ்பாள் நன்றாக இருந்ததா என்றால் நன்றாக இருந்தது. சம்பவ இடத்திற்கு நான் சென்ற போது தாழ்பாள் மற்றும் கதவுகளை புகைபடம் எடுத்தேனா என்றால் இல்லை. நான் கோவில் கதவுகள் திறந்திருந்ததை அறநிலைய துறை அதிகாரிகளுக்கு தெரியபடுத்திய பிறகு அவர்கள் சம்பவ இடத்திற்கு வந்து புகைப்படம் எடுத்தார்களா என்றால் அவர்கள் வந்தார்கள், ஆனால் புகைப்படம் எடுத்தார்களா என்று நான் கவனிக்கவில்லை.காவல் துறையினர் சம்பவ இடத்திற்கு வந்தார்களா என்றால் 01.11.2012 அன்று வந்தார்கள். காவல் துறையினர் சம்பவ இடத்திற்கு வந்த போது புகைப்படம் எடுத்தார்களா என்றால் எனக்கு தெரியவில்லை, நான் அவர்களுக்கு அருகில் இருந்தேன். நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது கோவில் கதவுகள் திறந்திருந்ததை முதலில் யாருக்கு தெரியப்படுத்தினேன் என்றால் அறநிலைய துறை அதிகாரியான செயல் அலுவலருக்கும், கணக்குபிள்ளைக்கும் தகவல் தெரிவித்தேன். செயல் அலுவலர் பெயர் என்னவென்றால் தெரியவில்லை. எத்தனை மணிக்கு அவர்களுக்கு தகவல் தெரிவித்தேன். என்றால் காலையில் 11.30 மணிக்கு கோவிலின் உள் சென்று பார்த்தஉடன் கதவு திறந்திந்ததை பார்த்துவிட்டு, பிறகு கோவிலுக்கு வெளியே வந்து வெளியே நின்றுக்கொண்டிருந்த ஒரு நபரிடம் அலைப்பேசியை வாங்கி அறநிலைய துறை அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தேன். நான் தகவல் தெரிவித்த பிறகு செயல் அலுவலரும், கணக்கு பிள்ளையும் எத்தனை மணிக்கு கோவிலுக்கு வந்தார்கள் என்றால் நான் தகவல் தெரிவித்த பிறகு

ஒன்றரை மணி நேரத்தில் இருந்து இரண்டு மணி நேரத்திற்குள் வந்துவிட்டார்கள். கோவிலுக்கும், இந்து சமய அறநிலைய துறை அலுவகத்திற்கும் எத்தனை கி.மீ தூரம் இருக்கும் என்றால் 5 கி.மீ தூரத்திற்கு மேல் இருக்கும். செயல் அலுவலருக்கும், கணக்கு பிள்ளைக்கும் நான் தகவல் கொடுத்த பிறகு கோவில் ஊழியர்கள் யாராவது சம்பவ இடத்திற்கு வந்தார்களா என்றால் இல்லை. என் வீட்டில் இருந்து ராஜ்குமார் வீடு எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் என் வீட்டில் இருந்து இரண்டு வீடு தள்ளி ராஜ்குமார் வீடு உள்ளது. காணாமல் போன ராமர் சிலையின் எடை எவ்வளவு இருக்கும் என்றால் தெரியாது. அதேபோல் சீதாதேவி, லெட்சுமணன் சிலைகளின் எடை எவ்வளவு என்றால் தெரியவில்லை. செயல் அலுவலருக்கு தகவல் தெரிவித்த பிறகு உயர் அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு வந்தார்களா என்றால் அதிகாரிகள் வந்தார்கள், ஆனால் யார் யார் வந்தார்கள் என்று தெரியவில்லை. செயல் அலுவலர் சம்பவ இடத்திற்கு வந்த பிறகு கோவில் உள்ளே வந்து பார்த்தாரா என்றால் உள்ளே வந்து பார்வையிட்டார். நான் செயல் அலுவலருக்கு புகார் மனு எதுவும் கொடுத்தேனா என்றால் நான் நடந்த விவரங்களை கூறியதை அவர்கள் எழுதிக்கொண்டார்கள், நான் புகார் எழுதிக்கொடுக்கவில்லையா என்றால் நான் கையால் எழுதிக்கொடுக்கவில்லை. நான் சொல்லச்சொல்ல எழுதிக்கொண்டார்கள். நான் எத்தனை மணிக்கு அவர்களிடம் விவரங்களை சொல்லி அவர்கள் எழுதினார்கள் என்றால் 31.10.2012ம் தேதியன்று மதியம் 12.00 இருக்கும். 31.10.2012ம் தேதியன்று இந்து சமய அறநிலை துறை அதிகாரிகள் என்னிடம் புகார் பெற்றுக்கொண்டு காவல் நிலையத்திற்கு சென்றார்களா என்றால் என்னிடம் எழுதியதை வாங்கிக்கொண்டு காவல் நிலையத்திற்கு சென்றார்கள். நான் காவல் துறையினரிடம் கொடுத்த வாக்குமூலத்தில்,

செயல் அலுவலர் என்னிடம் புகார் வாங்கிக்கொண்டு காவல் நிலையத்திற்கு போனார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தில் அளித்த முதல் விசாரணையில், நான் கொடுத்த புகாரினை செயல் அலுவலர் பெற்றுக்கொண்டு காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க போனார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். செயல் அலுவலர் காவல் நிலையத்திற்கு எந்த தேதியில் புகார் கொடுக்கச் சென்றார் என்றால் 31.10.2012 அன்று புகார் கொடுக்க சென்றார். செயல் அலுவலர் எத்தனை மணிக்கு புகார் கொடுத்தார் என்றால் செயல் அலுவலர் என்னிடம் புகாரை பெற்றுக்கொண்டு காவல் நிலையத்திற்கு சென்றது மட்டும் தான் தெரியும். அவர் எத்தனை மணிக்கு புகார் கொடுத்தார் என்று தெரியாது. செயல் அலுவலர் புகார் கொடுத்த பிறகு காவல் துறையினர் சம்பவ இடமான கோவிலுக்கு வந்தார்களா என்றால் 01.11.2012 அன்று காவல் துறையினர் வந்தார்கள். எத்தனை மணிக்கு காவல் துறையினர் வந்தார்கள் என்றால் 01.11.2012 அன்று காலை 10.00 மணிக்கு மேல் வந்தார்கள். காவல் துறையினர் வந்த பிறகு நான் கோவிலில் இருந்தேனா என்றால் நான் அப்போது பூஜை செய்ய கோவிலுக்கு சென்றிருந்தேன். காவல் துறையினர் அப்போது வந்தார்கள். எந்த காவல் நிலையத்தினர் காவல் நிலையத்தில் இருந்து வந்தார்கள் என்றால் பந்தநல்லூர் காவல் நிலையத்தில் இருந்து வந்தார்கள். காவல் துறையினர் எத்தனை பேர் வந்தார்கள் என்றால் 4 – 5 பேர் இருப்பார்கள். போலிசார் சம்பவ இடத்திற்கு வரும் போது யார் யார் அங்கு இருந்தார்கள் என்றால் நான் பூஜை செய்வதற்காக சென்றதால் இருந்தேன், வேறு யார் யார் இருந்தார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. காவல் துறையினர் சம்பவ இடத்திற்கு வந்த பிறகு பார்வை மகஜர் தயார் செய்தார்களா என்றால் பார்வை மகஜர் என்றால் என்னவென்று தெரியவில்லை. காவல் துறையினர் என்னிடம்

வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் நான் சொல்லியதை எழுதிக்கொண்டார்கள். எந்த தேதியில் நான் காவல் துறையினரிடம் விவரங்களை சொன்னேன் என்றால் 01.11.2012 அன்று அவர்கள் வந்தபோது சொன்னேன். காவல் துறையினரிடம் எத்தனை வாக்குமூலம் கொடுத்தேன் என்றால் ஒரு தடவை வாக்குமூலம் வாங்கினார்கள். சிலைகளை அடையாளம் காண்பிப்பதற்காக எந்த காவல் நிலையத்தில் இருந்து என்னை அழைத்தார்கள் என்றால் பந்தநல்லூர் காவல் நிலையத்தில் இருந்து என்னை அழைத்தார்கள். எந்த தேதியில் எத்தனை மணிக்கு காவல் நிலையத்தில் இருந்து என்னை அழைத்தார்கள் என்றால் 09.11.2012 அன்று காவல் துறையினர் என்னை அழைத்தார்கள். காணாமல் போன சிலைகளை நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து, சிலைகளை பெற்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியவில்லை. காவல் துறையினர் சம்பவ இடத்திற்கு வந்தபோது நான் இருந்தேன் என்றால் சரிதான். காவல் ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு வந்து தடயங்களை சேகரித்தார்களா என்றால் அவர்களாக பேசிக்கொண்டார்கள், அதை பற்றி எனக்கு தெரியவில்லை. கைரேகை நிபுணர்கள் வந்து தடயங்களை சேகரித்தார்களா என்றால் எல்லா அதிகாரிகளும் வந்தார்கள், யார் யார் என்று எனக்கு புரியவில்லை. நான் காவல் நிலையத்திற்கு சென்று சிலைகள் அடையாளம் காட்டியதாக சொல்லும் பட்சத்தில் ஆய்வாளரிடம் எங்கிருந்து சிலைகள் கிடைத்தது என்று கேட்டேனா என்றால் அவ்வாறு கேட்கவில்லை. கோவிலுக்கு இரவு காவலர் உண்டு என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்று இரவு காவலர் பணிக்கு வந்தாரா என்றால் அவருக்கு உடல் நிலை சரியில்லை என்று லீவு போட்டு சென்றுவிட்டார். யாரிடம் லீவு போட்டது குறித்து சொன்னார் என்றால் என்னிடம் லீவு என்று சொல்லிவிட்டு, கோவில் அலுவலகத்தில் லீவு குறித்து சொல்லியதாக

கூறினார். இரவு காவலர் விடுமுறையில் சென்றது குறித்து காவல் துறையினர் விசாரணையில் நான் கூறினேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. காணாமல் போன சிலைகள் குறித்து நான் செயல் அலுவலரிடம் தகவல் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் குறித்து எந்த அதிகாரிகளுக்கும் நான் அலைப்பேசி மூலம் தகவல் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் தகவல் தெரிவித்த பிறகு செயல் அலுவலர் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல. 30.10.2012ம் அன்று நான் கோவிலில் பூஜை செய்த பிறகு கோவிலின் கதவுகளை நான் பூட்டவில்லை என்றால் நான் பூட்டிவிட்டு தான் சென்றேன். எப்போதும் கோவிலில் பூஜை முடிந்த பிறகு பூட்டிவிட்டு தான் செல்வேன். 31.10.2012 அன்று காலையில் நான் கோவிலுக்கு பூஜை செய்ய செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் கோவிலுக்கு அன்று சென்ற பிறகு அனைத்து கதவுகளின் பூட்டுக்கள் உடைக்கப்படாமல் இருந்தது என்றால் சரியல்ல. 31.10.2012 அன்று செயல் அலுவலர் என்னிடம் எந்த புகார் மனுவும் எழுதிவாங்கவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் புகார் மனு பெற்ற பிறகு செயல் அலுவலர் காவல் நிலையத்திற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. செயல் அலுவலர் என்னிடம் எந்த புகார் வாக்குமூலமும் பெறவில்லை என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்திற்கு சென்று சிலைகளை அடையாளம் காட்டவில்லை என்றால் காவல் நிலையத்திற்கு சென்று அங்கு இருந்து அடையாளம் காட்டி வந்தேன். அதேபோல் கோவிலின் பிரதான கதவு மற்றும் மர கதவு கேட் ஆகியவற்றின் பூட்டுக்கள் உடைந்திருந்ததா நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும், செயல் அலுவலரும், இரவு காவலரும் கோவிலில் உள்ள சிலைகளை திருடிச்சென்று 1ம் எதிரியின் வீட்டிற்கு அருகே இருந்த புதரில் மறைத்து வைத்துவிட்டோம் என்றால் சரியல்ல.

காவல் ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு வந்து விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் எதிரிகளுக்கு எதிராக கூறிய சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை என்றால் சரியல்ல. காவல் துறை அதிகாரிகள் என்னை அவர்களுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க வற்புறுத்தியதன் பேரில் நான் பயந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கோவிலில் உள்ள கதவுகள் பழுதடையாமல் நன்றாக இருந்ததால் நான் தான் பணத்திற்கு ஆசைப்பட்டு கோவிலின் பூட்டை திறந்து சாமி சிலைகளை திருடியுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த குற்றத்தை மறைப்பதற்காகவே சம்பவ இடத்தின் கதவுகள் மற்றும் தாழ்பாள்களை புகைப்படம் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. காவல் துறையினரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் பூட்டுக்கள் உடைக்கப்பட்டது என்பதை நிரூபிக்க அதற்கான ஆவணங்கள் மற்றும் ஆதாரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததால் பூட்டுக்கள் உடைக்கப்பட்டிருந்தது என்று நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

*Typed to my dictation in open Court, read over to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.*

G. MANIKANDARAJA

Digitally signed by G. MANIKANDARAJA
Date: 2025.11.07 18:01:02 +0530

*Additional Chief Judicial Magistrate,*
*Kumbakonam.*